MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்
சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
MENMATHI KOVAI TAMIL MANDRAM
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# அற இலக்கியங்களில் கல்வி

முனைவர் **இரா. அன்சல்யா**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த் துறை
குயின்ஸ் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
புனல்குளம், புதுக்கோட்டை
கைபேசி : **9629405508**
மின்னஞ்சல்**: ansisubi1984@gmail.com**

# Education in Moral Literature

**Dr.R. Ansalya**
**Assistant Professor**
**Department of Tamil**
**Queens College of Arts and Science for Women**
**Punalkulam, Pudukkottai**
**Mobile: 9629405508**
**Email: ansisubi1984@gmail.com**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

**Abstract**

**Tamil, which is revered as the virgin Tamil and the divine Tamil, has the distinction of being the oldest language in the world and has excellent grammatical and literary resources. Education has become a very necessary thing to cultivate human life. Education should be learned in the mother tongue. Although other languages cannot destroy the powerful Tamil, it is our responsibility to protect it from decay, contraction and degeneration. Education is an essential thing for a person to live his life in a disciplined manner, to progress in life and to follow the path of virtue as taught by the sages. The purpose of this article is to examine education in moral literature.**

**ஆய்வுச்சுருக்கம்**

கன்னித் தமிழுன்றும் தெய்வத் தமிழென்றும் போற்றப்படும் தமிழ் மொழி உலகின் தொன்மையான மொழி என்ற சிறப்பும் சிறந்த இலக்கண, இலக்கிய வளமும் கொண்டது. கல்வியானது மனித வாழ்வினை பண்படுத்த மிகவும் அவசியமான ஒன்றாகி விட்டது. தாய் மொழியில் கல்விக் கற்றல் வேண்டும். பிற மொழிகளால் ஆற்றல் மிகு தமிழை அழித்துவிட முடியாது என்றாலும் சிதைவும், சுருக்கமும், நவிவும் ஏற்படாமல் காக்க வேண்டியது நம் பொறுப்பாகும். மனிதன் தன் வாழ்வினை நெறிப்பட வாழவும், வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவதற்கும் சான்றோர்கள் கூறிய அற வழியில் நடப்பதற்கும் இன்றியமையாத ஒன்றாய் அமைந்து இருப்பது கல்வியே ஆகும். அற இலக்கியங்களில் உள்ள கல்வியை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

**திறவுச்சொற்கள்**

கல்வி, வேதம்,வாழ்க்கை,ஆசிரியர், மெய்யுணர்வு ஆகியவை ஆகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

## முன்னுரை

கல்வியானது அறியாமை இருளை அகற்றும் மருந்தாகவும் புதியப் புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்திடவும், ஒற்றுமையை வளர்த்திடவும், படைப்புகளை வெளிக்கொணரவும், வேலை

வாய்ப்பினை அளித்திடவும் இன்னும் எண்ணற்ற காரியங்களை செய்வதற்கு கல்வியின்றி ஒன்றும் நிகழ்ந்திட முடியாத வண்ணம் கல்வியானது இன்றியமையாத ஒன்றாக மாறிவிட்டதை நாம் உணர முடிகிறது.

தமிழ்ச் செம்மொழி இலக்கியங்களில் சங்க கால நூல்களுக்குப் பின்னர் தோன்றியதே பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ஆகும். இந்நூல்களில் 11 அற நூல்களாகவும், 6 அகம் சார்ந்த நூலாகவும் 1 அகம் புறம் சார்ந்த நூலாகவும் இருக்கின்றது. அந்த வகையில் 11 அற நூல்களான, திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, ஏலாதி, திரிக்கடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, முதுமொழிக் காஞ்சி ஆகிய நூல்கள் ஆகும். இந்நூல்களில் கூறப்பட்டுள்ள கல்வி சிந்தனைகள், கல்விச் சார்ந்தக் கருத்துக்களை மாணவர்களுக்கு பயனுள்ள வகையிலும் அமைதலும் புதிய உந்து சக்தியாகவும் கல்வியில் ஏற்படும் மாற்றங்கள் குறித்தும் அதனை இன்றைய அற இலக்கிய கலை இலக்கியங்கள் கூறப்பட்டுள்ளதை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## கல்வியே துணை

ஒருவன் வாழ்க்கையில் எல்லாம் அறிந்தவனும் இல்லை. ஏதும் அறியாதவனும் இல்லை, குற்றம் இல்லாதவனும் இல்லை. எல்லா கல்விகளை கற்றவனும் இவ்வுலகில் எவனும் இல்லை.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

ஆகையால் நம் வாழ்க்கையை நமக்காக அமைத்துக்கொண்டு எல்லாவற்றையும் கற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்பதனைச் சிறப்பாக அமைந்து இருப்பதை பின்வரும் பாடல் வரிமூலம் அறியலாம்.

“ஒருவன் அறிவானும் எல்லாம்யா தொன்றும்
ஒருவன் அறியா தவனும் ஒருவன்
குண்டங்க்க் குற்றமில் லானாம் ஒருவன்
கணடைங்க்க் கற்றானு மில்”[1]

இக்கருத்தை சிறுபஞ்சம் பாடல்மூலம் அறியலாம்.

ஒரு ஆற்றினை கடப்பதற்கு கூட தோணி இயக்குபவன் நமக்குத் துணையாய் இருப்பான். அதுபோல மரக்கலத்தை நடத்துவோன் ஆராய்ந்தால் பழமையான சாதிகளில் கடைசியான சூத்திர சாதியிற் சேர்ந்தவன் என்று பெரியோர் நிந்திக்கமாட்டார். சாஸ்திரங்களைப் படித்து நல்ல நூற்பொருள்களைக் கற்றல் அந்த தோணி இயக்குபவன் போல நம் வாழ்விற்கு கல்வியானது துணையாய் நிற்கும்.

“தோணி யியக்குவான் தொல் லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டான் என்றகழார் காணாய்
அவன் துணையா ஆறுபோ யற்ற நூல் கற்ற
மகன் துணையா நல்ல கொளல்”[2]

## கல்விச் சிறப்பு

மனித வாழ்க்கையை நெறிபடுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் கல்வியானது பெரும் பங்கு வகிக்கின்றது எனலாம். நன்னடத்தை பழக்க வழக்கம், கலை, பயிற்சி,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

விடாமுயற்சி, பெரியோரை மதித்தல் போன்ற வாழ்க்கையை மேம்படுத்த உதவுவதற்கு கல்வி ஓர் உறுதுணையாக இருக்கின்றது. கல்வி கற்றவர் எங்குச் சென்றாலும் சிறப்புடன் இருப்பார்கள்.

“சென்ற புகழ் செல்வ மீக்கூற்ச் சேவகம்
நின்ற நிலைக் கல்வி வள்ளல்மை”[3]

இப்பாடலின் மூலம் திசையெங்கும் பரந்த புகழ், செல்வம், மேன்மையாக்க் கொள்ளுச்சொல், வீரத்தில் அசையாது நின்ற நிலை கல்வி வரையாது கொடுத்தல் ஆகிய இவ்வாறும் தொன்மையுடைய குடிபிறப்பு திருநான்மறை நெறி ஒழுக்கத்தில் உள்ளவர்களுக்கு உரிய இலக்கணமாக குறிப்பிடப் பட்டுள்ளது.

**வேதங்களைக் கற்றல்**

உலக வாழ்வு குறித்து நூல்களைப் பயில்வது ஞான சாத்திரங்களையும் தெரிந்துவைத்துக் கொள்ள வேண்டும் என்பதை,

“அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லாது
உலகநூ லோதுவ தெல்லங் கலகல”[4]

உறுதியான நூற்பொருள்களைக் கற்றுக்கொள்ளக் குற்றமில்லாத பண்டிதரிடத்தில் தாமதம் ஆகாமல் போவோம் என்று ஒருவர் சொன்னால் கீழானவன் தூங்குவோம் என்று எடுத்து போவான் என்பதை,

“காழாய கொண்டு கசடற்றார் தஞ்சரால
தாழாது போவாம் என உரைப்பின் கீழ்தான்
உறங்குவாம் என்றெழுந்து போமாம்
மறங்குமலம் மற்றொன்று னுத்து”[5]

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

“காலையும், மாலையும் நான் மறையோ தா
அந்தணரென்போ ரனைவரும் பிதரே”

என்ற நறுந்தொகைப் பாடல் காலையும் மாலையும் வேதம் ஓதாத அந்தனரென்று சொல்லப்படுவோர் அனைவரும் பதர் போலப் பயனில்லாதவரேயாவர்.

**வாழ்க்கைக்கு உதவுதல்**

வாழ்வில் ஒருமுறை நாம் கற்றக் கல்வியானது வாழ்க்கை முழுவதும் ஏன் ஏழு பிறப்பிற்கும் உதவும் வகையிலும் அமைந்து இருப்பது சிறப்பானதாகும். திருக்குறளில் கூறாத கருத்துக்களே இல்லை எனலாம். கல்வியின் சிறப்பினை மட்டும் கூறாமல் விட்டு விடுவார்களா என்ன? கண்டிப்பாக சிறப்பு செய்து உள்ளார் திருவள்ளுவர்.

“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவருக்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து”

என்ற குறளின் மூலம் அறியலாம்.**6**

வாழ்க்கைக்கு உதவும் கல்வியினை பிச்சை எடுத்தாயினும் கற்க வேண்டிய வயதில் கற்றல் வேண்டும். இக்கருத்தினை வெற்றி வேற்கைப் பாடலின் மூலம் உணரலாம்.

“கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே”[7]

**ஆசிரியர்களே உயர்ந்தவர்கள்**

கல்வி கற்ற சான்றோர்களே உயர்ந்தவர்கள். மனிதன், மனிதனாக வாழக் கற்றுக்கொடுப்பது கல்வியாகும். அந்தக் கல்வியினைக் கற்பிக்கும் ஆசிரியரைத் தேவர்களுக்கு சம்மாக ஒப்பிட்டுள்ளனர். அனைவரிலும் சிறந்தவர் ஆசிரியரே என்பதை திரிகடுகம்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

"ஒல்வதறியும் விருந்தினரை மாயிருரைக்
கொல்வ திடை நீக்கி வாழ்வானும்
கறுவி வெகுண்டுரைப்பான் பள்ளி இம்மூன்று
குறுகார் அறிவுடையார்"[8]

மாணவனின் மீது கோபம் அடைந்த சினந்து சொல்லி கொடுக்கும் கல்வி வீணாகிவிடும். ஆகையால் இன்முகத்துடன் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

" மேதையின் சிறந்தன்று கற்றது மறவாமை"[9]
"உய்ப்பானே ஆசான் உயர்கதிக்கு"[10]
"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றான் தொழஆர் எனின்"[11]
"எழுத்தறி வித்தவன் இறைவன் அவான்"[12]

**கற்றலின் மேன்மை**

தருமத்தையும் செல்வத்தையும் இன்பத்தையும் கொடுக்கும் கற்றறிந்த புலவன் இருக்கும் ஊர்ப்புறத்தே நல்ல புகழையும் நிலை நிறுத்த உதவி புரியும் உறுதுணையாக கல்வியை காட்டிலும் சிறந்தது வேறொன்றும் இல்லை. கல்விப் பொருள் ஒன்றே மக்களுக்கு எல்லாவித்த்திலும் சிறந்த துணையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

"அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசைவு நாட்டும் – உறுங்கவலொன்
உற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியின் உங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை"[13]

கல்வி கற்றலில் வெறும் பாடத்தை மட்டுமே படிப்பது என்று இல்லாமல் நல்லொழுக்கத்தை கற்பிக்கும் கல்வியாகவும் அமைதல் வேண்டும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

நம் நாட்டின் பழக்கவழக்கம், பண்பாடு, கலாச்சாரம் போன்ற அனைத்துப் பண்புகளையும் நம் முன்னோர்கள் நமக்கு கற்பித்தது போன்று நம் வருங்கால சந்ததியினருக்கு கற்பித்து அவர்கள் பயன்பெறும் வகையில் அமைதல் வேண்டும்.

இக்கருத்தினை நான்மணிப்பாடல் மூலம் அறியலாம்.

“ஆசாரம் என்பது கல்வி அறஞ்சோந்து”[14]

நல்லொழுக்கமென்பது கல்வியின் பயனாகும். கல்விக் கற்பதால் நல்ல மனித வாழ்க்கைக்குத் தேவையான நல்லொழுக்க பண்புகள் இவை அனைத்தும் கல்வியின் பயனாலேயே உண்டாகுவனவாகும்.

“பிறப்பு நெடுவாழ்கே செல்வம் வனப்பு
நிலக்கிழமை மிக்கூற்றங் கல்விநோ யின்மை
இலக்கணத்தா லிஞ்வெட்டு மெய்நுப வென்றும்
ஒழுக்கம் பிழையா ஏவர்”[15]

இப்பாடலின் மூலம் எப்பொழுதும் தான் ஒழுக்கத்திலிருந்தும் நடத்தையிலிருந்தும் தவறாதவர் நற்குடிப்பிறப்பு நீண்ட வாழ்நாள் பொருட்செல்வம் அழகுடைமை, நிலத்துக்கு உரிமை, சொல்லின் மேன்மை, கல்வி நோயின்மை இந்த ஏட்டினையும் அவற்றிற்குரிய இலக்கணங்களுடன் நல்லொழுக்கங்களையும் தப்பாமல் பின்பற்றுவர்.

**கல்வியால் உண்டாகும் மெய்யுணர்வு**

கல்வியால் வாழ்வில் உயர்வது மட்டுமல்ல மெய்யுணர்வாலும் உயரலாம் என்பதனை நாண்மணிக்கடிகையில்

“கல்வியே கல்விக்கும்
ஓதிற் புகல்சால் உணர்வு”[18]

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

அக்கல்வி அறிவிற்கும் புகழ் நிறைந்த மெய்யுணர்வே ஒளியாகும் என்று கல்வி சிறப்பிக்கப்பட்டுள்ளது.

“கற்ற துடைமை காட்சியினறிப”[19]

“ஓதலினற்றே வேதியர் ஒழுக்கம்”[20]

“கற்ற்றிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல் தெரிதல் வல்லார் அகத்து”[21]

கல்வியினால் உண்டாகும் மெய்யுணர்வுகளை கற்றல் மூலமாகவே அடைதல் முடியும். ஆகையால் கல்வியின் சிறப்பினை மாணவர்களாக இருந்த சான்றோர்களின் வழி அவர்களின் சிறந்த அறக்கருத்துக்களை பயன்படுத்தி நாம் வாழ்வில் சிறப்போம்.

**முடிவுரை**

நம் வாழ்வினை நெறிபடுத்துவதற்கு அற இலக்கியக் கல்வி பெரிதும் துணைப்புரிகிறது. நாகரீக வளர்ச்சியடைந்து பரப்பரப்பான வாழ்க்கையின் நடுவே அற இலக்கிய கருத்துக்களை மாணவர்களிடம் புகுத்தி வருங்கால சந்த்தியினரை செம்மையுற வாழ வைப்பது நம் பொறுப்பாகும். நம் சமுதாயத்தில் வாழும் மக்களின் வாழ்வினை நெறிபடுத்தி வாழ வைப்பது நம் அனைவரின் தலையாயக் கடமையாக கருதி செயல்படுத்த வேண்டும்.

**அடிக்குறிப்புகள்**

1. சிறுபஞ்சமூலம், பா. 131
2. ஏலாதி, பா.1
3. நாலடியார், பா.136

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

4. மேலது, பா.140
5. மேலது, பா.342
6. நறுந்தொகை, பா.65
7. திருக்குறள், பா.398
8. வெற்றி வேங்கை, 02
9. திரிகடுகம், பா. 10
10. மேலது, பா.26
11. மேலது, பா.46
12. சிறுபஞ்சமூலம், பா.191
13. மேலது, பா.34
14. திருக்குறள், 2
15. வெற்றிவேற்கை, பா.1
16. நீதிநெறி விளக்கம், பா.2
17. நான்மணிக்கடிகை, பா.96
18. ஆசாரம், பா.2
19. நான்மணிக்கடிகை, பா.96
20. முதுமொழிகாஞ்சி, பா.4
21. கொன்றை வேந்தன், பா.11
22. இன்னாநாற்பது, பா.155

## துணைநூற் பட்டியல்

1. எஸ். கௌமாரீஸ்வரி, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், முதற்பதிப்பு, மார்ச்.2009.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

2. நாலடியார் தெளிவுரை, புலியூர் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம்.
3. நான்மணிக்கடிகை புலியூர் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம்.
4. திரிகடுகம் புலியூர் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம்.
5. சிறுபஞ்சமூலம் புலியூர் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம்.